be competent to deal with these two sciences. Such being the case why should they be merged and will the Government consider the proposal to maintain the *status quo*?

THE HON. THIRU C. N. ANNADURAI: Till 1923 the two departments were integrated and afterwards they were separate. The Government of India have been urging this Government to integrate them once again. I have been hearing the views of the various Members and it makes me feel that there are two sides to the problem. Certainly we will correspond with the Centre about the views expressed by hon. Members like Mr. K. Vinayakam, about the need for not integrating them.

வேலூர் அரசினர் மருத்துவ மனை

** 429 வினா.—திரு. மா. பா. சாரதி: மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

வேலூர் அரசினர் மருத்துவ மனையில் காது, தொண்டை, மூக்கு வைத்திய நிபுணர் (E.N.T. Specialist) *கண் வைத்திய நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார்களா?*

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம். காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர் மேல் படிப்பிற்குப் போய் விட்டதால் அவருக்குப் பதிலாக மற்றொரு மருத்துவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, நியமனம் செய்யப்பட்ட டாக்டர் இப்பொழுது லீவு எடுத்துக் கொண்டாரா? இரண்டு மூன்று வருஷங்களாக அங்கு கண், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை செய்வதற்கு டாக்டர் இல்லாமல் இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. நிரந்தரமாக ஒரு டாக்டரை அங்கே நியமிப்பதற்கு சர்க்கார் முன்வருமா, அதை உடனடியாகச் செய்யுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே டாக்டர் நியமனம் செய்தாகிவிட்டது. அவர் லீவு எடுத்துக் கொண்டிருந்தால், லீவு முடிந்தவுடன் மறுபடியும் அங்கே வந்து சேர்ந்துவிடுவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மேற்கு வங்க ஐக்கிய முன்னணி அமைச்சரவையின் பதவி நீக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. என். சங்கரய்யா, திரு. வி. கே. கோதண்டராமன், திரு. செ. பாலசுப்பிரமணியன், ஆகியவர்கள் கையெழுத்திட்டு, ஒரு ஒற்றி